**நவம்பர் – 08**

# TNPSC துளிகள்

- சென்னை கொளத்தூரில் அமைக்கப்பட்டுள்ள ‘முதல்வர் படைப்பகம்’ என்ற மாநில அரசினால் நடத்தப் படுகின்ற மாநிலத்தின் முதல் இணைப் பணி மற்றும் கற்றல் மையத்தினை தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகமானது, 19வது சர்வதேச மருந்து ஒழுங்குமுறை ஆணையங்களின் (ICDRA) மாநாட்டை டெல்லியில் துவக்கி வைத்து உள்ளது.
- “வின்பாக்ஸ் 2024” எனப்படும் வியட்நாம் மற்றும் இந்தியா இடையிலான 5வது இரு தரப்பு ராணுவப் பயிற்சியானது ஹரியானா மாநிலத்திலுள்ள அம்பாலாவில் நடத்தப் படுகிறது.
- கெய்ர்ன் ஆயில் & கேஸ் என்ற நிறுவனமானது, ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் முதன்மையான மீத்தேன் அறிக்கையிடல் மற்றும் தணிப்பு முன்னெடுப்பு - எண்ணெய் மற்றும் எரிவாயு மீத்தேன் கூட்டாண்மை (OGMP) 2.0 உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - மீத்தேன் உமிழ்வைத் திறம்பட குறைப்பதற்கு உறுதியளித்த இந்தியாவின் முதல் எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தி நிறுவனம் இதுவாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## பழங்குடியினர் ஆராய்ச்சிக்கான தமிழ்நாடு புத்தாய்வு மாணவர் திட்டம்

**Fellowship:**

**a) No of Fellowships:**

I. Total Number of fresh fellowships in each year for Under Graduate and Post Graduate course is 25.
II. Total Number of fresh fellowships in each year for Doctor of Philosophy (Ph.D.) and Post Doctorate is 45.

**b) Value of Fellowship:**

| Course | Fellowship amount per month |
|---|---|
| Under Graduate and Post Graduate | Rs.10,000/- |
| Doctor of Philosophy and Post Doctorate | Rs.25,000/- |

- மாநில அரசானது, பழங்குடியினர் ஆராய்ச்சிக்கான தமிழ்நாடு புத்தாய்வு மாணவர் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பழங்குடியினச் சமூகங்கள் தொடர்பான சில துறைகளில் பணிபுரியும் 45 ஆராய்ச்சி மாணவர்கள் உட்பட 70 மாணவர்களுக்கு ஆதரவளிப்பதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் புத்தாய்வு மாணவர் உதவித் தொகைத் திட்டத்தினை வழங்குவதற்கான சில வழிகாட்டுதல்களை மாநில அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 45 ஆராய்ச்சி மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் Ph.D. அல்லது முனைவர் பட்டம் பெற்றதற்குப் பிந்தைய ஆராய்ச்சிக்காக அதிகபட்சமாக மூன்று

ஆண்டுகளுக்கு மாதம் 25,000 ரூபாய் புத்தாய்வு மாணவர் உதவித்தொகை கிடைக்கும்.

- இதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 25 இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களில் ஒவ்வொருவருக்கும் ஆறு மாதங்களுக்கு மாதாமாதம் சுமார் 10,000 ரூபாய் புத்தாய்வு மாணவர் உதவித் தொகை வழங்கப்படும்.
- விண்ணப்பிப்பதற்கான அதிகபட்ச வயது ஆண்களுக்கு 50 ஆகவும், பெண்கள் மற்றும் திருநர்களுக்கு 55 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## DRRWG அமைச்சர்கள் கூட்டம்

- G-20 அமைப்பின் பேரிடர் அபாயக் குறைப்பு செயற்குழுவின் (DRRWG) அமைச்சர்கள் கூட்டம் ஆனது பிரேசிலின் பெலத் நகரில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வானது பேரிடர் அபாயக் குறைப்பு (DRR) தொடர்பான முதல் அமைச்சரகப் பிரகடனத்தை இறுதி செய்தது.
- பேரிடர் நெகிழ்திறன் கொண்ட உள்கட்டமைப்புகளுக்கானக் கூட்டணி (CDRI) ஆனது தற்போது 40 நாடுகளையும் 7 சர்வதேச அமைப்புகளையும் தனது உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.
- DRR செயற்குழுவானது 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் முன்னெடுப்பின் பேரில் G20 அமைப்பின் அதன் தலைமைத்துவத்தின் போது நிறுவப்பட்டது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பதிவான அதிகபட்ச வெப்பம்

- கடந்த 124 ஆண்டுகளில் (1914 ஆம் ஆண்டு முதல்) இந்தியாவில் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதமானது வெப்பமான அக்டோபர் மாதமாக பதிவாகியுள்ளது.
- அந்த மாதத்தில் சராசரியாக 26.92 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது.
- இது எதிர்பார்த்த அளவை விட 1.23 டிகிரி செல்சியஸ் அதிகமாகும்.
- அக்டோபர் மாதத்திற்கான குறைந்தபட்ச வெப்பநிலை முன்னெப்போதும் இல்லாத


அளவை எட்டியது என்பதோடு இது 1901 ஆம் ஆண்டில் IMD பதிவுகளை மேற்கொள்ளத் தொடங்கியதிலிருந்து மிக அதிகமாகும்.

❖ டெல்லி சஃப்தர்ஜங் பகுதியின் மாதாந்திர அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச சராசரிகள் முறையே 35.1 டிகிரி செல்சியஸ் மற்றும் 21.2 டிகிரி செல்சியஸ் என பதிவு செய்யப் பட்டுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பட்டினி நிலை அதிகம் காணப்படும் பகுதிகள் குறித்த அறிக்கை




❖ உணவு மற்றும் வேளாண் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் (WFP) ஆனது 'பட்டினி நிலை அதிகம் காணப்படும் பகுதிகள்: கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை குறித்த FAO-WFP ஆகியவற்றின் முன் எச்சரிக்கைகள்:

நவம்பர் 2024 முதல் மே 2025 வரையிலான கண்ணோட்டம்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- அடுத்த ஆறு மாதங்களில் மொத்தம் 22 நாடுகள்/பிரதேசங்களை உள்ளடக்கிய 14 நாடுகள் மற்றும் இரண்டு பிராந்தியக் குழுக்களில் மிகவும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலை மோசமடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- தற்போது நடைபெற்று வரும் மோதல்களும் ஆயுத வன்முறைகளும் பல பகுதிகளில் பட்டினி நிலைக்கான முக்கியக் காரணங்களாக உள்ளன.
- சூடான், பாலஸ்தீனம், தெற்கு சூடான், ஹைதி மற்றும் மாலி ஆகிய நாடுகள் மிக அதிக அளவிலான எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ள நிலையில் உள்ளன.
- சாட், லெபனான், மியான்மர், மொசாம்பிக், நைஜீரியா, சிரிய அரபுக் குடியரசு மற்றும் ஏமன் ஆகியவை அதிக எச்சரிக்கை நிலைகளுடன் கூடிய பெரும் பட்டினி நிலையால் பாதிக்கப் பட்ட மற்ற பகுதிகள் ஆகும்.

## ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு 2024


**Where does your passport rank?**

| Rank | Countries | Visa-free Access Score |
|---|---|---|
| 1 | Singapore | 195 |
| 2 | France, Germany, Italy, Japan, Spain | 192 |
| 3 | Austria, Finland, Ireland, Luxembourg, Netherlands, South Korea, Sweden | 191 |
| 4 | Belgium, Denmark, New Zealand, Norway, Switzerland, United Kingdom | 190 |
| 5 | Australia, Portugal | 189 |
| 6 | Greece, Poland | 188 |
| 7 | Canada, Czechia, Hungary, Malta | 187 |
| 8 | United States | 186 |
| 9 | Estonia, Lithuania, United Arab Emirates | 185 |
| 10 | Iceland, Latvia, Slovakia, Slovenia | 184 |

- சிங்கப்பூர் நாட்டின் கடவுச் சீட்டானது, அதன் குடிமக்கள் 195 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இன்றி பயணம் மேற்கொள்ளலாம் என்பதால் அது மீண்டும் உலகின் மிக சக்தி வாய்ந்த கடவுச் சீட்டு என்ற அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.
- பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் சுமார் 192 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இன்றி பயணம் மேற்கொள்ள தங்கள் பெரும் குடி மக்களுக்கு அனுமதி அளித்து இரண்டாவது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

- அமெரிக்கா தனது குடிமக்களுக்கு 186 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இன்றி பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கி 8வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தியா அதன் குடிமக்களுக்கு சுமார் 58 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இன்றி பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கி 83வது இடத்தில் உள்ளது.
- ஆப்கானிஸ்தான், சிரியா, ஈராக், யேமன், சோமாலியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் கடவுச் சீட்டுகள் உலகின் மிகக் குறைந்த சக்தி வாய்ந்தவையாக உள்ளன.

## ஆசியா-பசிபிக் பருவநிலை அறிக்கை 2024





- ஆசிய மேம்பாட்டு வங்கியானது, அதன் சமீபத்திய ஆசிய-பசிபிக் பருவநிலை என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- புதைபடிவ எரிபொருட்களிலிருந்து தூய்மை எரிசக்தித் துறைக்கு மாறுவதற்கான பெரிய மாற்றத்தில் இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை இது எடுத்துக்காட்டுகிறது.
- இந்தியாவின் சீர்திருத்தங்கள் ஆனது, புதைபடிவ எரிபொருள் மானியங்களை 85% குறைக்க வழிவகுத்தது என்பதோடு 2013 ஆம் ஆண்டில் 25 பில்லியன் டாலரில் இருந்த இந்த மானியமானது 2023 ஆம் ஆண்டில் 3.5 பில்லியனாக குறைந்தது.
- தூய்மை எரிசக்தித் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக 2010 முதல் 2017 ஆம் ஆண்டு வரை நிலக்கரி உற்பத்தி மீதான வீத வரியை இந்தியா அமல்படுத்தியது.
- ஆனால் நிலக்கரி வீத வரியானது 2017 ஆம் ஆண்டிற்குப் பிறகு சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடாக மாற்றப்பட்டது.
- பல்வேறு சீர்திருத்தங்கள் தற்போது இருந்த போதிலும், புதைபடிவ எரிபொருள்கள் ஆனது இன்றும் இந்தியாவின் ஆற்றல் நுகர்வில் குறிப்பிடத்தக்கப் பங்கைக் கொண்டு உள்ளன.

## ஆசிய-பசிபிக் பேரிடர் அறிக்கை 2024

- UNDRR ஆனது பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரில் 2024 ஆம் ஆண்டு பேரிடர் அபாயக் குறைப்பு (APMCDRR) தொடர்பான ஆசிய-பசிபிக் அமைச்சர்கள் மாநாட்டை நடத்துகிறது.
- "ஆசியா-பசிபிக் பேரிடர் அறிக்கை 2024" கிழக்கு மற்றும் வடகிழக்கு ஆசியாவில் மாறி

வரும் பேரிடர் நெகிழ் திறனில் கவனம் செலுத்துகிறது.

- 1970 முதல் 2024 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட பேரழிவுகள் ஆனது சுமார் அரை மில்லியன் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது.
- இது சுமார் 3 பில்லியன் மக்களைப் பாதித்தது மற்றும் கிழக்கு மற்றும் வடகிழக்கு ஆசியாவில் சுமார் 2 டிரில்லியன் டாலர் மதிப்பிலான சேதத்தை ஏற்படுத்தியது.
- குறிப்பாக வடக்கு மற்றும் மேற்கு சீனாவில் ஏற்படும் சுமார் 1.5 டிகிரி செல்சியஸ் முதல் 2 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உயர்வு வறட்சி ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும் என்பதோடு இது மேற்கு சீனாவுக்கும் பரவி மேலும் தீவிரமடையும்.
- சீனாவானது 450,000க்கும் அதிகமான உயிரிழப்புகளுடன் துணைப் பிராந்தியத்தில் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகளைப் பதிவு செய்துள்ளது என்ற நிலையில் அதனை தொடர்ந்து சுமார் 32,000க்கும் அதிகமான உயிரிழப்புகளுடன் ஜப்பான் இடம் பெற்றுள்ளது.
- கிழக்கு மற்றும் வடகிழக்கு ஆசியாவில், முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகள் ஆனது ஆண்டிற்கு 107.5 பில்லியன் முதல் 161.3 பில்லியன் டாலர் வரையிலான இழப்புகளைத் தடுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன.




# மாநிலச் செய்திகள்

## ஜம்மு காஷ்மீரில் மார்கோர் காட்டு ஆடு




- அறிவியல் ரீதியாக காப்ரா ஃபால்கோனர் என அழைக்கப்படுகின்ற மார்கோர் காட்டு


ஆடுகளின் வாழ்விட இழப்பு, சட்டவிரோதமான வேட்டையாடுதல் மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக அவற்றின் நிலை மோசமாகி வருகின்றன.

- இது வடக்கு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள காசினாக் என்ற தேசியப் பூங்காவிலும், தெற்கு காஷ்மீரின் ஷோபியான் மாவட்டத்தில் உள்ள ஹிர்போரா என்ற வனவிலங்குச் சரணாலயத்திலும் உள்ளது.
- இது உலகின் மிகப் பெரிய காட்டு ஆடாகக் கருதப்படுகிறது.
- இந்தியாவில் மார்கோர் ஜம்மு&காஷ்மீரில் மட்டுமே காணப்படுகிறது.
- இந்த உயிரினங்கள் ஆனது 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் முதலாவது அட்டவணையில் பட்டியலிடப் பட்டுள்ளதோடு IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின் கீழ் 'அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனம்' என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- UNGA ஆனது இந்த ஆண்டு முதல் மே 24 ஆம் தேதி சர்வதேச மார்கோர் தினமாக அனுசரிக்கப் படும் என்று அறிவித்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## முதல் ஆசியப் பௌத்த உச்சி மாநாடு

- இந்தியாவானது சர்வதேச பௌத்தக் கூட்டமைப்புடன் (IBC) இணைந்து முதல் ஆசியப் பௌத்த உச்சி மாநாட்டை (ABS) புது டெல்லியில் நடத்தி வருகிறது.
- 'Role of Buddha Dhamma in Strengthening Asia' என்ற கருத்துருவின் கீழ் இந்த உச்சி மாநாடு நடைபெற்றது.
- "India as the Dhamma Setu (Bridge) connecting Asia" என்ற கருத்துருவின் கீழான ஒரு சிறப்புக் கண்காட்சியும் இதில் நடத்தப்படுகிறது.




## 16வது பங்குதாரர்கள் மாநாட்டின் முடிவுகள்

- உயிரியல் பன்முகத் தன்மை உடன்படிக்கை மீதான 16வது பங்குதாரர்கள் மாநாடு என்பது கொலம்பியாவின் காலியில் நடைபெற்றது.

- பல்லுயிர்ப் பெருக்கம் தொடர்பான விவாதங்களில் பல பழங்குடியினக் குழுக்களைச் சேர்ப்பதற்கான அமைப்பை நிறுவச் செய்வதற்கான முன்மொழிவினை இது ஏற்றுக் கொண்டது.
- பலதரப்பு நெறிமுறைக்கான திட்டங்களுடன், மரபணு தரவுகளின் பயன்பாட்டிலிருந்து பெறப்படும் நியாயமான பலன் பகிர்வு பற்றிய பல விவாதங்கள் இன்னும் தீர்க்கப் படாமால் உள்ளன.
- பல்லுயிர்ப் பெருக்கத்திற்கான தொழில்நுட்ப ஆதரவு, ஊடுருவல் இனங்கள் குறித்த பல பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் பல்லுயிர்ப்பெருக்கம்-பருவநிலை ஒருங்கிணைப்பை மேம்படுத்த ஒப்புக் கொள்ளப் பட்டது.
- மறுபுறம், பல்லுயிர்ப் பெருக்கம் சார்ந்த பல இலக்குகளுக்கு ஆண்டுதோறும் தேவைப் படும் மதிப்பிடப்பட்ட 200 பில்லியன் டாலரில் ஒரு பகுதியே வழங்க உறுதியளிக்கப் பட்டுள்ளது.
- ஆனாலும் DSI நிதிக்கான பங்களிப்புகள் அல்லது நிதி மற்றும் தொழில்நுட்ப வள ஒதுக்கீட்டிற்கான வழிமுறைகள் மீது ஒருமித்த கருத்து ஏற்படவில்லை.
- KMGBF இலக்குகள் பிணைப்பு சாராமல் உள்ளன என்ற ஒரு நிலைமையில் இது இந்த இலக்குகளுக்கான உலகளாவிய உறுதிப்பாடுகளைப் பாதிக்கக் கூடும்.
- இந்தியா 2025-30 ஆம் ஆண்டு முதல் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் வளங்காப்பிற்காக 81,664 கோடி ரூபாய் செலவாகும் என்ற மதிப்பிடலுடன் புதுப்பிக்கப்பட்ட பல்லுயிர்ப் பெருக்கத் திட்டத்தை முன்வைத்தது.
- இந்த மாநாடு ஆனது 2022 ஆம் ஆண்டில் கனடாவின் மாண்ட்ரியலில் நடைபெற்ற கூட்டங்களைத் தொடர்ந்து நடைபெற்றது.
- அந்தச் சந்திப்பில், 2030 ஆம் ஆண்டிற்குள் 30% நிலம் மற்றும் நீர் நிலைகளைப் பாதுகாக்க நாடுகள் ஒப்புக் கொண்டன என்ற நிலையில் இது '30-by-30 ஒப்பந்தம் என்று அழைக்கப் படுகிறது.
- இந்த இலக்குகளில் ஊடுருவக் கூடிய அயல் இனங்களின் அறிமுகத்தைச் சுமார் 50% அளவிற்கு குறைப்பதும், 2030 ஆம் ஆண்டிற்குள் அவற்றின் தாக்கத்தைக் குறைப்பதும் அடங்கும்.




## கெமி படேனோச்

- பிரிட்டனின் கன்சர்வேட்டிவ் (பழமைவாத) கட்சி ஆனது அதன் புதிய தலைவராக 44

வயதான கெமி படேனோச் என்பவரை நியமித்துள்ளது.

- இதன் மூலம் அவர் ஒரு முக்கியமான பிரிட்டிஷ் கட்சிக்குத் தலைமை வகிக்கும் முதல் கறுப்பின அரசியல்வாதி மற்றும் கறுப்பின பெண் அரசியல்வாதி என்ற ஒரு பெரும் பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ரிஷி சுனக்கிற்குப் பதிலாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- முன்னாள் பிரிட்டிஷ் இந்திய உள்துறை செயலாளர் பிரித்தி படேல் அவரது நிழல் வெளியுறவுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




# விளையாட்டு செய்திகள்

## 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி




- அமெரிக்காவின் கொலராடோவில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 17 பதக்கங்களை வென்றுள்ளது.

- இதில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் வென்ற நான்கு தங்கப் பதக்கங்களும் அடங்கும்.
- 9 ஆடவர் மற்றும் 10 மகளிர் அடங்கிய 19 குத்துச்சண்டை வீரர்கள் கொண்ட இந்திய அணியில், 12 தடகள வீரர்கள் இறுதிப் போட்டியை அடைந்தனர் என்பதோடு இதில் ஒவ்வொரு மகளிர் குத்துச்சண்டை வீராங்கனையும் பதக்கம் வென்றனர்.
- நான்கு தங்கப் பதக்கம் வென்றவர்களில் பட்டியலில் உள்ள ஒரே ஆண் சாம்பியன் ஹேமந்த் சங்வான் ஆவார் என்ற நிலையில் இதில் மற்ற பெண் சாம்பியன்கள் கிரிஷா வர்மா, பார்த்தவி கிரேவால் மற்றும் வன்ஷிகா கோஸ்வாமி ஆகியோர் ஆவர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★